# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 0027/2017/ந

ஆணை எண்: 170/2017

நாள்: 22/06/2017

திரு. R. ராஜாமணி,
த/பெ திரு. ராக்கப்பன்,
கதவு எண்.666, கீழத் தெரு, வெட்டியூர் கிராமம்,
அரியக்குடி சேகரம், அரியக்குடி போஸ்ட்,
காரைக்குடி வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

– முறையீட்டு மனுதாரர்

திரு. யு. அழகர்,
வருவாய் உதவியாளர்,
காரைக்குடி நகராட்சி மற்றும் பிறர்.

– எதிர் மனுதாரர்கள்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. ரா. ராஜாமணி என்பவரது 11.02.2017 நாளிட்ட முறையீட்டு மனு 13.02.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0027/17 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் 31.12.2007ல் சாலைக்குடி சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.8176/2007ல் கிரையப் பத்திரம் மூலம் தனக்கு கிரையம் செய்யப்பட்ட 3768 சதுரடி மற்றும் 1841 சதுரடி நிலத்திற்கு, முதல் பிரதிவாதியான திரு. யு. அழகர், காரைக்குடி நகராட்சியின் வரித்தண்டலராக இருந்தவர் சதிக் கூட்டாக இருந்து திருமதி. பழனியம்மாள் என்பவர் பெயரில் எந்த ஒரு அடிப்படை ஆவணமும் இல்லாமல் லஞ்சம் வாங்கிக் கொண்டோ வேறு சாதகத்தை அடைந்து கொண்டோ வரி விதிப்பை (வரி விதிப்பு எண்.32463) ஏற்படுத்தியுள்ளார் என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்

மேற்குறிப்பிட்ட தனது பெயரிலுள்ள சொத்திற்கான கிரையப் பத்திர நகலினையும் சமர்ப்பித்துள்ளார். மேலும் பதிவுத்துறை, சார் பதிவாளர் அலுவலகத்தில் எடுக்கப்பட்ட 01.01.1987-20.09.2016 தேடுதல் காலம் கொண்ட மேற்படி சொத்து தொடர்பான வில்லங்கச் சான்றிதழின் நகலினையும் சமர்ப்பித்துள்ளார்.

மேலும், மேற்படி தனது இடத்தினை சிலர் அபகரிக்க முயல்வது குறித்தான தனது காவல் துறைக்கு முகவரியிட்ட கடித நகல், முதல் தகவல் அறிக்கை நகல் ஆகியவற்றையும் மனுதாரர் சமர்ப்பித்துள்ளார். நகராட்சி தொடர்பான புகாரினைத் தவிர பிற இனங்கள் இம்முறைமன்ற நடுவ பரிசீலனைக்கு/விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியது அல்ல. நகராட்சி தொடர்பான புகார் குறித்து பதிலறிக்கை தாக்கல் செய்திடுமாறு திரு. யு. அழகர், வரித்தண்டலர் அவர்களுக்கு அறிவிப்பாணை (எண்.0027/17/ந) நாள்:16.2.17) காரைக்குடி நகராட்சி ஆணையர் மூலமாக சார்வு செய்திடும் வகையில் அனுப்பப்பட்டது. மேலும், 03.04.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு முறையிட்டு மனுதாரருக்கு அழைப்பாணை (அசல் மனு எண்.0027/17/ந நாள்:23.02.2017) அனுப்பப்பட்டது.

எதிர்மனுதாரர் திரு. யு. அழகர், (தற்போது வருவாய் உதவியாளராக காரைக்குடி நகராட்சியில் பணிபுரிபவர்) அவர்களின் 22.03.2017 நாளிட்ட விளக்க அறிக்கை, காரைக்குடி நகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண்.977/2017/அ4, நாள்:22.03.2017 உடன் வரப்பெற்றது. மேற்படி விளக்க அறிக்கையில் புகாரிலுள்ள வரி விதிப்பினை திருமதி. எஸ். பழனியம்மாள் என்பவரது பெயரில் கீழ்க்கண்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. உள்நாட்டு பத்திரம் மூலம் திரு. இளங்கோவன் என்பவர் காந்தி த/பெ நாகலிங்கம் என்பவருக்கு 1987-ல் மனையிடமாக கிரையம் செய்து கொடுத்தது

2. 1997-ல் திரு. நா. காந்தி என்பவர் திரு. சண்முகம் த/பெ குமரப்பா என்பவருக்கு மனையிடமாக கிரையம் செய்தது

3. திரு. கு. சண்முகம் என்பவர் 12.10.1997-ல் காலமானதால் அன்னாரின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் ஆகியவற்றின் அடிப்படையிலும் திரு. கு. சண்முகம் என்பவருடைய மனைவி திருமதி. எஸ். பழனியம்மாள் என்பவருக்கு 2012-13 நிதியாண்டு முதல் அரையாண்டிலிருந்து வரி வதிப்பு எண்.32463 மூலம் வரி விதிப்பு ஏற்படுத்தப்பட்டது.

03.04.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜரான முறையிட்டு மனுதாரர் முறையாக பத்திரப் பதிவு மூலம் தான் கிரையம் பெற்ற இடத்தில் அமைத்த சிறு ஓட்டுக் கட்டிடத்தை

2012ல் திருமதி. பழனியம்மாள் என்பவரும் 6 நபர்களும் சேர்ந்து நொறுக்கிவிட்டனரெனவும் இது குறித்து காவல் துறையில் புகார் செய்து வழக்கு பதியப்பட்டுள்ளதை குறிப்பிட்டு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார். மேலும், அவர்கள் தன்னை உள்ளே நுழைய விடாமல் தடுத்ததாகவும் இது பற்றி தான் காவல் நிலையத்தில் புகார் செய்த போது வீட்டு வரி திருமதி. பழனியம்மாள் பெயரில் போடப்பட்டிருப்பதை காட்டியதாகவும் குறிப்பிட்டுள்ளார். தான் யார் பெயரிலும் எழுதிக் கொடுக்காமல் இருந்தும் திருமதி. பழனியம்மாள் பெயரில் வீட்டுவரி ரசீது (எண்.32463) போடப்பட்டுள்ளதெனவும் அதனை ரத்து செய்து தனது பெயரில் ரசீதினை திரும்ப போட உத்தரவிடுமாறும் மனுதாரர் கோரியுள்ளார்.

இது குறித்து காரைக்குடி நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.077/2017/அ4, நாள்:10.04.2017ல், புகார் மனுவில் தெரிவித்துள்ள மனையிடத்தில் கட்டப்பட்டுள்ள வீட்டிற்கு சம்பந்தப்பட்ட புகாருக்குரியவர் திருமதி. பழனியம்மாள் க/பெ.சண்முகம் என்பவர் வீடு கட்டி அனுபவித்து வருவதால் அவர் பெயரில் வாரிசு அடிப்படையிலும், அவரது கணவர் கிரயம் பெற்றுள்ள பத்திரத்தின் அடிப்படையிலும் 03-04-2012ம் தேதிய உறுதிமொழிப் பத்திரத்தின் அடிப்படையிலும் மேற்கோப்பு வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதென்றும் சம்பந்தப்பட்ட சொத்துரிமை குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருவதாக மனுதாரர் தெரிவித்துள்ளாரெனவும் மேற்படி நீதிமன்ற உத்தரவுகள் வரப்பெற்றதும் வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்மனுதாரர் திரு.யு.அழகர் வருவாய் உதவியாளர் 05.06.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.0027/17/ந நாள்:26.4.17ல் ஆணையிடப்பட்டது. அதன்படி விசாரணைக்கு ஆஜரான மேற்படி நகராட்சி பணியாளர் கீழ்க்கண்டவாறான தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்தார்:-

"நான் பில் கலெக்டராக இருந்தபோது இலுப்பக்குடி தேவஸ்தான இடங்களுக்கு புதிய வரி விதிப்பு செய்ய சொத்து உரிமை ஆவணங்களையும் பதிவு செய்யப்படாத உள்நாட்டு பத்திரம் மூலம் வரி விதிப்பு செய்யப்படும். காரைக்குடி நகராட்சி சந்தைப்பட்டியில் கருணாநிதி நகரில் 300 சதுர அடியில் ஒரு ஓட்டு கொட்டகை கட்டியுள்ளார்கள். முதலில் சண்முகம் மனைவி பழனியம்மாள் என்பவர் 03.04.2012 அன்று மனு செய்தார். அவர்களிடம் உள்ள ஆவணங்கள் விவரம் கேட்டேன். அவர்கள் மூன்று ஆவணங்கள் கொடுத்தார்கள். அதில் 1987ல் உள்நாட்டு பத்திரம் ஆகிய பதிவு செய்யப்படாத ஆவணத்தை தாக்கல் செய்தார். அதிகாரிகள் செய்யசொல்வதால் பதிவு செய்யப்படாத ஆவணங்களை வைத்து ஆணையரின் உத்தரவின் பேரில் வரிவிதிப்பு செய்து கொடுப்பேன். அதன்மூலம் அதன்

உரிமையாளர் ஆகிவிடுவார். தற்போதுள்ள ஆணையாளர் இதுபோன்ற உள்நாட்டு பத்திரங்களை அனுமதிக்கக்கூடாது என்று கூறியுள்ளதால் நாங்கள் அது போன்று செய்வதில்லை. 2012-13 பொறுப்பில் இருந்த திரு. மாரியப்பன் நகராட்சி பொறியாளராகவும், ஆணையர் பொறுப்பிலுமிருந்தார். அவர் உத்தரவின் பேரில் உள்நாட்டு பத்திரங்களை வைத்து வரிவிதிப்பு செய்யப்பட்டது. வருவாய் உதவியாளரான நானும் வருவாய் உதவியாளர் திரு. இரவிசந்திரன் அவர்களும் நேரிடையாக ஆய்வு செய்து அங்கு குடியிருந்த பழனியம்மாளிடம் ஸ்டேட்மெண்ட் வழங்கியுள்ளோம். புல தணிக்கை செய்யும் பொழுது வாக்குமூலமோ, அறிக்கையோ வீட்டில் உள்ளவர்களிடம் பெற்று பதிவு செய்யப்படாத பத்திரம் மற்றும் உறுதிமொழி பத்திரம் மற்றும் உள்நாட்டு பத்திரம் ஆகியவற்றை ஆவணங்களாக வைத்து வரிவிதிப்பு செய்தோம். அந்த உறுதிமொழியோடு பதிவு செய்யப்படாத 20 ரூபாய் முத்திரைத்தாளில் பெற்ற பத்திரத்தை அடிப்படையாக வைத்தே நாங்கள் பெயர் மாற்றம் செய்தோம். நோட்டரிபப்ளிக் தடையில்லா சான்று பெற்றுக்கொடுப்பதின் அடிப்படையிலும் நாங்கள் வரிவிதிப்பு செய்கிறோம்."

மேற்கண்ட வாக்குமூலத்துடன் அதில் குறிப்பிட்டுள்ள பதிவு செய்யப்படாத ஆவண நகல் மற்றும் இதர ஆவணங்களின் நகல்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

பதிவு சட்டங்களுக்கு முரணாகவும், சொத்துரிமை சட்டங்களுக்கு முரணாகவும் முறையாக பதிவு செய்யப்படாத ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருவரது சொத்துரிமையை மாற்றும் வகையில் வரி விதிப்பு மாற்றம் செய்வதென்பது சட்ட சீதியாக வழங்கப்பட்ட சொத்து உரிமையை பறிக்கின்ற செயலாகவே கருதப்படும். இந்நிலையில் சட்டங்களை முறையாக செயல்படுத்த வேண்டிய அலுவலர்களே இந்நேர்வில் சட்ட விதிமுறைகளுக்கு எதிராக செயல்பட்டு தனி நபரது சொத்துரிமையை பறிக்கும் செயலில் ஈடுபட்டுள்ளார் என்பது எதிர்மனுதாரரது வாக்குமூலத்தின் வாயிலாகவே உறுதியாகிறது.

புகாரில் குறிப்பிட்டுள்ள சொத்து/இடத்தின் உரிமை குறித்து நீதிமன்ற வழக்கு நிலுவையிலிருப்பின் அது குறித்து நீதிமன்ற தீர்ப்புக்குப்பின் உரிய நடவடிக்கை எடுக்கப்படலாம். ஆனால், வரி விதிப்பில் முறையான அடிப்படை ஆவணங்கள் கூட இல்லாமல் வரி விதிப்பு பெயர் மாற்றம் செய்துள்ளதென்பது சட்டத்திற்கு முரணான செயலாகும். அநேக நேர்வுகளில் சமூக விரோதிகளுக்கு துணை போகும் நிலை ஏற்படுகிறது. எனவே, அத்தகைய வரி விதிப்புகளை இரத்து செய்யவோ அல்லது நிறுத்தி வைக்கவோ ஏன் நடவடிக்கைகள் எடுத்திடக் கூடாதென்பதை பரிசீலித்து உரிய துறை அலுவலரது ஆணைகள் பெறப்பட வேண்டுமென வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

காரைக்குடி நகராட்சியைப் பொறுத்தவரை பதிவு செய்யப்படாத சட்டப்படி ஏற்க இயலாத உள்நாட்டுப் பத்திரங்களைக் கொண்டு வரி விதிப்புகள் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தனது வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, இதற்கென ஒரு உயர்மட்ட அலுவலர் குழுவை அமைத்து இந்நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அத்தகைய முறைகேடான வரிவிதிப்புகளை கண்டறிந்து அதற்குப் பொறுப்பானவர்கள் மீது துறைவாரியான நடவடிக்கைகள் மட்டுமன்றி காவல்துறை மூலம் குற்றவியல் நடவடிக்கைகள் தொடரவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

இப்பொருள் குறித்து நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு நகராட்சி நிர்வாக மண்டல **இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவம் கேட்டுக் கொள்கிறது.**

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 29/6/17

29.6.17

27/6/17

பெறுநர்

1. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
   எழிலகம், சேப்பாக்கம். சென்னை – 600 005.
2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   (மதுரை மண்டலம்)
   நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், மதுரை.
3. நகராட்சி ஆணையர்,
   காரைக்குடி நகராட்சி,
   காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.
4. திரு. பு. அழகர்,
   வருவாய் உதவியாளர்,
   காரைக்குடி நகராட்சி, காரைக்குடி,
   சிவகங்கை மாவட்டம்.
5. திரு. R. ராஜாமணி,
   த/பெ. திரு. ராக்கப்பன்,
   கதவு எண்.666, கீழத் தெரு, வெட்டியூர் கிராமம்,
   அரியக்குடி சேகரம், அரியக்குடி போஸ்ட்,
   காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்.